23rd January 1965]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) கன்னியாகுமாரி மாவட்டத்தில் 1964-ம் ஆண்டுவரை 2,308 ஏக்கரா பரப்புள்ள நிலத்தில் அரசாங்கம் ரப்பர் பயிரிட்டிருக்கிறது.

(இ) 1963-64ம் ஆண்டுவரை ஏற்பட்ட செலவு ரூபாய் 33,01,994.

கூட்டுறவு இலாகா துணை ரிஜிஸ்திரார்கள்

*108. **கேள்வி—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கூட்டுறவு இலாக்காவில் துணை ரிஜிஸ்திரார் பதவிகளை நிரப்புவதில் எத்தனை சதவீதம் பதவி உயர்வு பெறுபவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் நிலையான பதவிகளிலும் தற்காலிகப் பதவிகளிலும் சேர்ந்து 25 சதவீதம் நேரடி நியமனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இதர துறைகளுக்கும் பணியாற்ற அனுப்பி வைக்கப்படுகிற சிறப்புத் துணைப் பதிவாளர் பதவிகளில் 50 சதவீதமும் அடங்கும். இப் பதவிகள் நீடிக்குமெனவும் கருதுகிரேம். இப்பதவிகளில் எஞ்சிய 75 சதவீத காலிஇடங்கள் கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன்மூலம் நிரப்பப்படுகின்றன.

New Court buildings at Madurai

*109 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether a suitable site at Madurai city or its surroundings has been selected for locating the proposed new Court buildings; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :—

(*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன்: ஏற்கனவே இங்கு இரண்டு ஜில்லாக்களுடைய கோர்ட்டுகள் வைக்கப்பட்டிருப்பதிலே இட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. தவிர, 350 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடமாக இருப்பதால், பல விரிசல்கள், இடிபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, சீக்கிரத்திலே இடம் மாற்றுவதற்கு இடம் பார்த்து வேறு கட்டடம் கட்டும் உத்தேசம் உண்டா? இது சம்பந்தமாக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன நிலைமையில் இருக்கின்றன?